கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.52/2020 வா.சா.1 நாராயணசாமி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 20.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ரங்கசாமி கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு இருந்தது. ரங்கசாமியும் அவரது சகோதரரும் பாகம் பிரித்து கொண்டதாக சொல்லும் வா.சா.ஆ. 4 1967 பாக சாசனத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் பார்த்து உள்ளேன். ரங்கசாமியின் சகோதரர் பெயர் என்ன என்றால் ராமசாமி ஆகும். வா.சா.ஆ. 4 பாக சாசனத்தில் ஏ அட்டவணைச் சொத்தும் பி அட்டவணைச் சொத்தும் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என தெரியுமா என்றால் தெரியாது.

2) வா.சா.ஆ. 4 பாக சாசனத்தில் ரங்கசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதி மட்டுமே வழக்கு சொத்து ஆகும் என்றும் பிற பகுதிகள் இவ்வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை என் தந்தை தான் வா.சா.ஆ. 1 கிரைய சாசனப்படி ரங்கசாமியின் வாரிசுகளான செல்லம்மாள் , வள்ளியம்மாள் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். நான் என் வழக்குரையிலும் என் சாட்சிய வாக்குமூலத்திலும் வா.சா.ஆ. 1 கிரைய சாசனப்படி வழக்கு சொத்துகளும் இதர சொத்துகளும் கிரையம் பெற்றதாக தான் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இதர சொத்துக்கள் என் முன்பாத்தியஸ்தர்களுக்கு எப்படி பாத்தியம் என்றால் அவர்களது தந்தை ரங்கசாமிக்கு வா.சா.ஆ. 4 பாக சாசனப்படி பாத்தியப்பட்டு அதன் பின்னர் அவர்களுக்கு பாத்தியப்பட்டது. என் முன்பாத்தியஸ்தர்களுக்கு எந்த ஆவணம் அடிப்படையில் அந்த இதர

சொத்துக்கள் பாத்தியப்பட்டன என்றால் வா.சா.ஆ. 5 பாக சாசனம் படி பாத்தியப்பட்டது. வா.சா.ஆ. 5 பாக சாசனத்தில் மேற்படி இதர சொத்துக்கள் கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல.

3) மேற்படி இதர சொத்துக்களின் தற்போதைய காலை எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இதர சொத்துக்கள் இவ்வழக்கில் வழக்கு சொத்தாக இல்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி